
1

## சிறப்பு வரைபடங்கள் 1.3
## மாதாந்த வெளிநாட்டு நாணயக் கணக்குப் புள்ளிவிபரங்கள்

மாதாந்த வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு புள்ளிவிபரங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2024ஆம் ஆண்டின் இரு மாதாங்கள் தவிர பெரும்பாலான மாதங்களின் நடைமுறைக் கணக்கு மீதியானது சாதகமாகக் காணப்பட்டு, ஆண்டிற்கான நடைமுறைக் கணக்கு மிகையொன்றினைத் தோற்றுவித்தது. 2024 செத்தெம்பரில், விசா தொடர்பான இடையூறுகள் மற்றும் பொதுவான பருவகால சரிவினால் சுற்றுலாத்துறையானது பாதிக்கப்பட்டமையினால் பணிகள் கணக்கு மிகை வழமைக்கு மாறாகக் குறைவாகவிருந்தது. 2024 திசெம்பரில், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மறுசீரமைத்தலுடன் தொடர்புடைய முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளாகவும் பணிகள் கணக்கிலிருந்து அரச செலவினமாகவும் குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு நடைமுறைக் கணக்கானது 2025இன் முதலாவது இரண்டு மாதங்களிலும் மிகையொன்றினைப் பதிவுசெய்தது.